செய்தி வெளியீடு எண் : 165 நாள் : 25.01.2024

# செய்தி வெளியீடு

2023 – 2024–ஆம் ஆண்டிற்கான சிறந்த அங்கக விவசாயிகளுக்கான நம்மாழ்வார் விருதுகள் தஞ்சாவூர் மாவட்டம், மகர்நோன்புச் சாவடியைச் சேர்ந்த திரு கோ. சித்தர், அவர்களுக்குமுதல்பரிசும், திருப்பூர் மாவட்டம், பொங்கலூரைச் சேர்ந்த திரு. கே.வெ.பழனிச்சாமி அவர்களுக்கு இரண்டாம் பரிசும் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம், அச்சுக்கட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. கு. எழிலன் அவர்களுக்கு மூன்றாம் பரிசும் வழங்கப்படுகிறது.

2023–2024–ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு வேளாண்மை – உழவர்நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் அறிவித்தவாறு மாநில வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அங்கக வேளாண்மையில் ஈடுபடுவதோடு பிற அங்கக விவசாயிகளுக்கும் கைகொடுக்கும் மூன்று அங்ககவிவசாயிகளுக்கு **சிறந்த அங்கக விவசாயிகளுக்கான "நம்மாழ்வார் விருதுடன்"** பரிசுத்தொகை, சான்றிதழ் மற்றும் பதக்கம் ஆகியவற்றை வழங்க மூன்று விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

**விவசாயிகள் விவரம் பின்வருமாறு**:–

திருகோ.சித்தர், மகர்நோன்புச்சாவடி, தஞ்சாவூர் மாவட்டம் அவர்களுக்கு முதல்பரிசாக ரூ.2.50 இலட்சம் ரொக்கப்பரிசு, சான்றிதழ் மற்றும் பதக்கம், திரு.கே.வெ.பழனிச்சாமி, பொங்கலூர், திருப்பூர் மாவட்டம் அவர்களுக்கு இரண்டாம் பரிசாக ரூ.1.50 இலட்சம் ரொக்கப்பரிசு, சான்றிதழ் மற்றும் பதக்கம் மற்றும் திரு. கு. எழிலன், அச்சுக்கட்டுகிராமம், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களுக்கு மூன்றாம் பரிசாக ரூ.1.00 இலட்சம் ரொக்கப்பரிசு, சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கப்பட உள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in